ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வாழைக்காய்க்கான சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இன்னும் பணிகள் துவங்கப்படவில்லை. சின்னமனூர் பகுதி, வாழைக்காய் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்ற பகுதி. நல்ல விலை கிடைக்காத காலங்களில் அவற்றைச் சேமிப்பதற்கு இயலாததால் அந்த வாழைகள் சேதாரம் அடைகின்றன. ஆகவே, அந்தப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும் என்பதனை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமனூரில் வாழைக்காய் பழம் பழுக்க வைப்பதற்கான கூடம் ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்பொழுது தனியாரே அதற்கு முன்வந்து, வாழைப்பழம் கிரேடு செய்கின்ற அந்த முறையைப் பின்பற்றி வருகின்றார்கள். ஆகவே, அரசின் சார்பில் தனியாக அமைக்க வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்படவில்லை. இருந்தாலும், அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் வாழைப்பழத்தை கிரேடு செய்து அதைப் பக்குவப்படுத்தி தனியாரிடம் நல்ல விலைக்குக் கொண்டுபோய் விற்பதற்கான வசதிகளை அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

கட்டட வசதி

***121206-திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 11]

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே,

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென தகுந்த அரசு நிலத்தினைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரிய நிலம் பெறப்பட்டபின் இவ்வலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக நடத்திவரும் இந்தப் பொற்கால ஆட்சியில் நாகர்கோவில் நகருக்கு பொறியியல் கல்லூரி, சுரங்க நடைபாதை, ஆயுர்வேதக் கல்லூரி, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், போக்குவரத்துப் பணிமனை, வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம், பத்திரப் பதிவு அலுவலகத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட ஏராளமான மக்கள் நலப் பணிகளைச் செய்து சாதனை படைத்திருக்கிறார்கள். குமரி மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவில் நகரில் இருக்கின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் தினமும் ஏராளமான வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. மக்கள், தங்கள் தேவைகளுக்காக அந்த அலுவலகத்திற்கு தினமும் மிக அதிகமான அளவில் வந்து செல்கின்றார்கள். இடநெருக்கடியால் வாடகைக் கட்டடத்தில் உள்ள அந்த அலுவலகம், கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 3 இடங்களுக்கு இட மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு, சொந்த இடத்தில் புதிய கட்டடம் கட்ட உடனே அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை மீண்டும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் பொருட்டு 5 ஏக்கர் அரசு நிலம் சர்வே எண் ஜே 20/1-ல் தேர்வு செய்யப்பட்டு அதனை போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. விரைவிலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியைப் பெற்று இந்த ஆண்டு அந்தப் புதிய கட்டடம் கட்டுவதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மிகவும் நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பல மகளிர் பள்ளிகள், மகளிர் கல்லூரிகள் இருக்கும் இடங்களில் அந்தப் பள்ளிகள், கல்லூரிகள் தொடங்கும் நேரத்திலும், முடியும் நேரத்திலும் மாணவிகள் பயணம் செய்ய மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆண்களும், பெண்களும் பயணிக்கும் பேருந்துகளில் அவர்கள் பள்ளி முடிந்து, அல்லது கல்லூரி முடிந்து பேருந்துகளில் ஏறும்போது இட நெருக்கடியால் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, தமிழகம் முழுவதும் மகளிர் பள்ளி, கல்லூரிகள் உள்ள பகுதிகளில் தனியாக பேருந்துகள் விட்டு அதற்கு, மகளிர் ஓட்டுநரும், மகளிர் நடத்துநரும் நியமிக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே இதற்கு விளக்கமான பதிலுரை தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல மகளிருக்கென்று தனியாக மகளிரே ஓட்டுநராக, நடத்துநராகக் கொண்டு அப்படி நடத்துகிற எண்ணம் அரசிடம் இல்லை. குறிப்பாக இப்போது வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெண்கள் ஓட்டுநருக்கும், நடத்துநருக்கும் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று அவர்கள் வருகிறபோதுகூட,

2010 நவம்பர் 11]

நாங்களும் பரீட்சார்த்தமாக பெண்களுக்காக இடங்கள் தரலாம் என்று சொல்லி ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் 5 பேர், 10 பேர் என்று எடுத்தபோது, வேலையில் சேர்ந்த ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாகவே எங்களால் இந்தப் பணி செய்ய இயலாது, மாற்றுப் பணி வேண்டுமென்று கோருவதும் அல்லது அவர்களுக்கு leave தேவை என்றும், பிரசவ காலத்தில் திடீரென்று எங்களுக்கு 3 மாத காலம் அதற்கு அவகாசம் தேவையென்றும், இதுபோன்ற பல பிரச்சினைகள் வந்த காரணத்தால்தான் பெண்களை ஓட்டுநர்களாக, நடத்துநர்களாக நியமிக்கிற அந்த முறையை இப்போது குறைத்திருக்கிறோம். எனவே, பெண்களை ஓட்டுநர்களாக, நடத்துநர்களாக நியமிக்கின்ற எண்ணம் தற்போது அரசிடம் இல்லை. இதுபோன்று சிரமங்கள் இருக்கின்ற காரணத்தால் மட்டுமே அல்லாமல் வேறு ஒன்றும் இல்லை. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் தமிழகம் முழுவதும், பள்ளிகள் ஆரம்பிக்கிற நேரத்தில் குறிப்பாக பள்ளி மாணவர்களுக்காகப் பேருந்துகளை விட முடியுமா என்று சொன்னால், அதற்கான பொருட் செலவு, அதற்குத் தேவைப்படுகிற பேருந்து வசதிகள் என்பது ஒரு பெரிய அளவில் இருக்கும். பரீட்சார்த்தமாக இப்போது சென்னையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து ஆய்வுகள் செய்யச் சொல்லிக் கேட்டிருக்கிறோம். ஆய்வு முடிவுகள் வந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று இதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் இருக்கிற அரசு போக்குவரத்துப் பணிமனைக்கு இரண்டு முறை நம்முடைய அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அதற்கு அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்கித் தந்தால் அந்தப் பணிகள் துவக்கப்படுமென்று சொல்லியிருந்தார்கள். 10 இலட்சம் ரூபாய் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் துவக்கப்படுமா, எப்போது துவக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறைதான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அரசுப் பணிமனைகளுக்குப் பணம் ஒதுக்கலாம் என்ற உத்தரவை அரசாணையாக வெளியிட்டிருக்கிறார்கள். பல சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கு அதற்கான நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. விரைந்து அந்த டெண்டர்களை அதற்கான தேதி வந்தவுடன் திறந்து, பணிகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் இருக்கின்ற போக்குவரத்துத் துறை அலுவலகத்தில் கீழ்த்தளம் படுமோசமாக இருக்கிறது. அதற்கு சிமென்ட் போட்டு தளத்தை அமைத்துத் தருவார்களா? அதேநேரத்தில் போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகின்ற பெண்களுக்கு பிரசவ கால விடுப்பு அளிப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா, போக்குவரத்துத் துறையில் அது நடைமுறையில் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் பெண்களுக்கென்று பல்வேறு சலுகைகளை வழங்கினார்கள். இந்தத் துறையினைப் பொறுத்த அளவிற்கு உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1,20,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு விடுப்பு கொடுப்பது என்பது, eligible leave என்று கொடுத்தாலே 20 சதவீதம் அவர்களுக்குத் தரவேண்டியிருக்கிறது. நமக்கு தினந்தோறும் பேருந்துகளை ஓட்டுவதற்கு மறுபடியும் ஏற்கெனவே ஓட்டிக்கொண்டிருந்த ஓட்டுநர், நடத்துநர்களைத்தான் உபயோகிக்க

வேண்டியிருக்கிறது. எனவேதான், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சிறப்பு அனுமதி பெற்று, Reserved Crew என்று தற்காலிகப் பணியாளர்களாக, 6,000, 7,000 பேர்களை வைத்திருக்கிறோம். நிரந்தரப் பணியாளர்கள் leave எடுத்துச் செல்கின்றபோது, இவர்களை உபயோகப்படுத்துவதற்காகத்தான். அப்படி எடுத்திருக்கின்ற பணியாளர்களை, retirement vacancy வருகின்றபோது, அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்திக்கொண்டு வருகிறோம். இவ்வளவு சிரமங்கள் இருக்கின்ற நேரத்தில், மூன்று மாத காலம் leave தர முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் இன்னும் ஆராயவில்லை. உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை உரிய முறையில் ஆராயலாம். இருந்தாலும், இந்தப் பணிக்குப் பெண்கள் என்பது இயலாது என்பது என்னுடைய கருத்து. இருந்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களேயானால் அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரிலே R.T.O. அலுவலகம் அமைப்பதற்கு அமைச்சரிடம் வேண்டுகோளை வைத்து, அமைச்சர் அவர்களும் அனுமதித்து, இப்போது மேட்டூரிலே இருந்து பிரித்து ஓமலூரிலே அதை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மேட்டூரைவிட அதிக வாகனங்கள் பதிவாகி, அதிக வருவாய் வருவதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். தனியார் கட்டடத்திலே இருக்கிறது. அதற்காக ஓமலூரிலே இருந்து தருமபுரி செல்கின்ற சாலையை ஒட்டிய 16 ஏக்கர் கோயில் நிலத்திலே கட்டடம் அமைப்பதற்கு அரசுக்கு முன்மொழிவு வந்திருக்கிறது. எனவே, அந்த நிலத்திலே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாக பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு போக்குவரத்துத்

துறையிலே 50-க்கும் மேற்பட்ட புதிய அலுவலகங்கள் இப்போது உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்பது சட்டமன்ற உறுப்பினர்களுடைய விருப்பம். துறையின் சார்பாகவும் அதை நாங்கள் செய்ய விருப்பப்படுகிறோம். எங்களுக்கு எந்தப் பணப் பிரச்சினையும் இல்லை. ஏனென்று கேட்டால், இதற்கென்று தனியாக Service Tax வசூல் செய்கிறோம். கட்டடம் கட்டுவதற்காகவே, இந்தத் துறையில் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காகவே, Service Tax வசூலிக்கப்பட்டு அது இருப்பிலே இருக்கிறது. கோயில் நிலம் என்று வருகின்றபோது அதிலே கொஞ்சம் காலதாமதம் ஆகின்றது. அவர்கள் அனுமதியளித்தாலொழிய அதிலே கட்டடம் கட்டுவது என்பது இயலாது. நேற்று, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கின்றபோது துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு, சந்தை விலையிலே இடங்களை வாங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மின்சாரத் துறையிலே அப்படி வாங்க முடியும் என்று சொன்னால் அதனுடைய வழிமுறைகளைப் பின்பற்றி, நம்முடைய துறையிலும் அதேபோல் வாங்கிக் கட்ட முடியுமா என்பதைப் பற்றி ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே உடுமலைப்பேட்டை வட்டத்திலே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம் வேண்டுமென்று கேட்டேன். அதற்காக செல்லாண்டியம்மன் கோயில் நிலத்திலே இரண்டரை ஏக்கர் நிலம் தேர்வு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. துரிதமாக நடவடிக்கை எடுத்து கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு, அதோடு உடுமலைப்பேட்டையிலே ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படும் என்று சொல்லியும் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

2010 நவம்பர் 11]

அதனையும் கருத்திலே எடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். ஏற்கெனவே, இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தைப் பெறுவதிலே கொஞ்சம் காலதாமதம் ஆகிறது. முறைப்படிதான் ஒவ்வொரு இடமாகச் சென்று அந்த அனுமதி பெறவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்முயற்சி எடுத்து இடத்தைப் பெற்றுத் தருவாரேயானால் கட்டடம் கட்டுவதிலே எங்களுக்கு ஒன்றும் சிரமம் இல்லை. மேலும், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே, 17 இடங்களில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் நம்முடைய போக்குவரத்துத் துறை சார்பாக இருந்தன. கடந்த காலத்திலே மூடப்பட்டு இருந்தன. மீண்டும் இப்போது திறக்கப்பட்டு 20 இடங்களிலே ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் அரசு சார்பாக நடத்தப்படுகின்றன. தனியார் நடத்துகின்ற ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரை அதற்கென்று தனி சட்ட திட்டங்கள் இல்லாமல், அவர்கள் நினைத்ததைப்போல பழைய வாகனங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருந்ததை மாற்றி, அவர்களுக்கென்று ஒரு தனி இடம் இருக்க வேண்டும், புதிய வாகனங்கள் இருக்க வேண்டுமென்று புதிய சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்போதுதான் அதற்கு நீதிமன்றத்திலே தீர்ப்பு கிடைத்திருக்கிறது. விரைவிலே அதை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுக்கலாம்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.